வாக்குமூலம்

**திருவையாறு நீதித்துறை நடுவர் நீதிமன்றம்**

வழக்கு எண்.**CC 78/2017**

வழக்கு சாட்சி- **அ.சா.6**

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | ஹரிதாஸ் | : | ஜாதி | |
| தந்தை பெயர் | கலியபெருமாள் | : | தொழில் | விவசாயம் |
| கிராமம் | ராயராம்பட்டி | : | சமயம் | |
| தாலுக்கா | | : | வயது | 50/2023 |

(எதிரி ஆஜர் )

**<u>நாள் : 21.12.2023</u>**

**முதல் விசாரணை:** நான் ராயராம்பட்டி குடியிருந்து விவசாய வேலை செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள கையெழுத்து என்னுடையது அல்ல. இந்த வழக்கை பற்றி எனக்கு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரணை செய்யவில்லை.

**(சாட்சியை பிறழ் சாட்சியாக அரசு தரப்பில் பாவிக்க கோரி, அனுமதி கேட்கப்பட்டது, அனுமதி வழங்கப்பட்டு , நீதிமன்ற அனுமதியுடன் குறுக்கு விசாரணை)**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை:** கடந்த 19.04.2016-ம் தேதி அன்று பகல் 13.00 மணியளவில் நானும் மந்திரி என்பவரும் சம்பவ இடத்தில் நின்று பேசிக்கொண்டு இருந்தோம் என்றால் சரியல்ல. அப்போது பூதலூர் காவல் நிலையத்தை சார்ந்தவர்கள் அங்கு வந்து எங்கள் முன்பாக சம்பவ இடத்தை பற்றிய ஒரு மாதிரி வரைபடமும் பார்வை மகசரும் தயார் செய்தார்கள் என்றால் சரியல்ல. அதில் நாங்கள் கையெழுத்து செய்தோம் என்று போலீஸ் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரிகளுக்கு பயந்து, எதிரிகளுக்கு ஆதரவாகவும், அரசுதரப்பிற்கு எதிராகவும் பிறழ் சாட்சியாக மாறி சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால், சரியல்ல.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை** இல்லை

**(ஒம்./-திரு. து.ஹரிராம், பி.காம், பி.எல்.,**

**நீதித்துறை நடுவர், திருவையாறு )**